# ★ எதிரி எம்மைத் தாக்க எல்லையில் நிற்கிறான்

பொது நூலகம் யாழ்ப்பாணம்

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 புரட்டாதி 1 இதழ் 222
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 27 – 9 1993

## — இளம்பரிதி உரை

(யாழ்ப்பாணம்)
"யாழ். குடாநாட்டு மக்கள் மீது பெரிய, விரைவான படையெடுப்பை நடாத்த எதிரானவன் இரண்டு வருடமாகத் திட்டமிட்டு வருகின்றான். இதற்குப் பல பக்கங்களில் இருந்தும் நெருக்குதல் கொடுக்கப்படுகின்றது. ஒரு பக்கத்தில் சமாதானப் பேச்சு, இடைக்கால நிர்வாகம், அமைதித் தீர்வு, பூநகரிப் பாதை திறப்புப் பற்றிப் பேசி வரும் அரசு, மறு பக்கத்திலே தயார்படுத்தப்பட்ட போர் நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றது. இவ்வாறு செயற்பட்டு மக்களைக் குழப்பத்திலும், மயக்கத்திலும் மூழ்கடிக்கின்றது. எனவே நாம் விழிப்பாக

(2-ஆம் பக்கம் பார்க்க)

## ஆங்கில ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறிகள்

(யாழ்ப்பாணம்)
ஆங்கில ஆசிரியர்களாக தெரிவு செய்யப்பட்டோருக்கான பயிற்சிநெறி பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் நடாத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதாக யாழ். அரச அதிபர் திரு க. மாணிக்கவாசகர் தெரிவித்துள்ளார்.

மேற்படி பயிற்சி நெறிக்கு தெரிவானோரை வவுனியா, நீர்கொழும்பு ஆகிய இடங்களுக்கு வருமாறு முதலில் அறிவிக்கப்பட்டிருந்தது. இப்பயிற்சி நெறியை யாழ்.

(4 ம் பக்கம் பார்க்க)

## ● திருமலை மொறவேவவில்

# விமானப் படைத் தளம் மீது

# புலிகள் திடீர் அதிரடித் தாக்கு

## 2 படையினர் பலி; நால்வர் காயம்

(திருமலை)
திருமலை மாவட்டத்தில், மொறவேவ பகுதியில் விமானப் படைத் தளம் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் நேற்றுக் காலை மேற்கொண்ட திடீர் அதிரடித் தாக்குதலில், இரண்டு விமானப் படையினர் கொல்லப்பட்டதுடன், நால்வர் படுகாயம் அடைந்ததாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

மொறவேவ விமானப் படைத்தளத்தில் படையினர் தாக்கவும் போர்ப்பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போதே விமானப் புலிகள் திடீரென தாக்கியதாக அவ்வட்டாரங்கள் கூறின. இதேவேளை திருமலை மற்றோர் இடத்தில் விமானப்படையினருக்கும்புலிகளுக்குமிடையில் கடும் மோதல் இடம்பெற்றதாகவும்

(6-ம் பக்கம் பார்க்க)

## திலீபன் நினைவு இறுதி நிகழ்வுகள் உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)
தியாகி திலீபனின் 6-வது ஆண்டு நிறைவு நாள் நிகழ்வு கள் நேற்று தமிழீழ மெங்கும் அனுஷ்டிக்கப்பட்டது.

தமிழீழமெங்கும் ஒவ்வொரு வீடுகளிலும், அரச, தனியார் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் பொது ஸ்தாபனங்கள், விடுதலைப்புலிகளின் முகாம் கள், பாசறைகள் அலுவலகங்கள் சுவர்த்துறை பணிமனைகளில் தமிழீழ நீதிமன்றங்களில் தியாகி திலீபனின் உரு

(2-ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு வலய எல்லையில்

# மண்டைதீவு ஷெல் வீழ்ந்தது

### பாதுகாப்பு விளக்குகள் சிதறின; இருவர் காயம்

(யாழ்ப்பாணம்)
மண்டைதீவிலிருந்து நேற்று மாலை ஏவப்பட்ட ஆட்லறிஷெல் யாழ். வில்லூரியேட்டருக்கு முன்பாக பாதுகாப்பு வலய எல்லையில் வீடொன்றில் வீழ்ந்து பாரிய சத்தத்துடன் வெடித்ததில் இருவர் படுகாயமடைந்தனர். பாதுகாப்பு வலய ரியூப் லைற்றுகள் சிதறி முற்றாக நாசமாகின.

நேற்று மாலை 6-50 மணியளவில் மண்டைதீவுப் பகுதியிலிருந்து தெருப்புக் கோளமாக வந்த இந்த ஆட்லறி ஷெல் செம்மாதெருவில் பிர

(2-ம் பக்கம் பார்க்க)

# அரசு - புலிகள் பேச்சு நடத்தி பிரச்னையைத் தீர்க்கவேண்டும்

## ஆஸ்திரேலிய தூதர் கோரிக்கை

(கொழும்பு)
இலங்கை இனப்பிரச்னைக்கு தீர்வுகாண விடுதலைப்புலிகளும் இலங்கைஅரசும் பேச்சுவார்த்தையில் ஈடுபடவேண்டுமென இலங்கைக்கான ஆஸ்திரேலிய தூதர் திரு ஹவேட் எடியன் கூறியுள்ளார்.

நாட்டின் இனப்பிரச்னையையும், மோசமாகிவரும் பொருளாதாரப்பிரச்னையையும் தீர்க்க இருதரப்பினரும் பேச்சுவார்த்தை நடாத்தி சுமுகமான தீர்வைக் காணவேண்டுமென்றார்.

இலங்கை இனப்பிரச்னை தீர்வு தொடர்பாக ஆஸ்திரேலிய அரசு மிகுந்த அக்கறை கொண்டு வருவதுடன் இப்பிரச்னையை அரசும்புலிகளுமே பேசுவதன் மூலம் தீர்க்கமுடியுமென வற்புறுத்தி வருவதும் தெரிந்ததே. (ஸி)

பருத்தித்துறையில்

# 'பாஜ்'சினை நோக்கி பீரங்கித் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)
பருத்தித்துறை துறைமுகப் பிரதேசத்தில் கப்பல்கள் தரித்து நின்று பொருட்களை இறக்கும் எல்லையில் கட்டப்பட்டிருந்த 'பாஜ்'சினை நோக்கி கடற்படையினர் நேற்று கடுமையான பீரங்கித் தாக்குதல் மேற்கொண்டனர்.

(4ம் பக்கம் பார்க்க)

## வடக்கே படைமுகாம்களில்

# இராணுவப் பயிற்சி

(கொழும்பு)
வடபகுதியில் உள்ள படைமுகாம்களில் புதிதாக இராணுவத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டோருக்கான பயிற்சிகள் தற்போது நடைபெற்று வருகிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

## இரு ஊர்காவல் படை

## முல்லை. தாக்குதலில் பலி

(முல்லைத்தீவு)
முல்லை மாவட்டம் சாமன்குளம் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் ஊர்காவல் படையினருக்குமிடையில் இடம்பெற்ற மோதலில் இரு ஊர்காவல் படையினர் கொல்லப்பட்டனர் பல ஆயுதங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

நேற்று முன்தினம் காலை

(4-ம் பக்கம் பார்க்க)

## ★ யாழ்ப்பாணம் வந்த

# பத்து லொறிகள்

## வவுனியாவில் பிடிபட்டன

(கொழும்பு)
கொழும்பிலிருந்து தடை செய்யப்பட்ட பொருட்களை ஏற்றிக்கொண்டு யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த பத்து லொறிகள் வவுனியாவில் வைத்து இராணுவத்தினரால் நேற்று முன்தினம் கைப்பற்றப்பட்டது.

யாழ்ப்பாணத்திற்கு பொருட்களை ஏற்றிச் செல்லும் தமிழ் வர்த்தகர் ஒருவரின் லொறியின் மறைவிடம் ஒன்றிலிருந்து என்ஜின் ஒயிலும், வேறு பொருட்களும்

(4-ஆம் பக்கம் பார்க்க)

## கிளாலி-பூநகரி படகுச் சேவை

(யாழ்ப்பாணம்)
கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்றும், நாளையும் வழமையான நேரத்திற்கு நடைபெறுமென, விடுதலைப் புலிகள் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். (ஸி)

## விளம்பரம்


### நோவு வைத்தியம்

ஒட்டகப்புலம் சமத்தர் நோவு எண்ணெய் கிடைக்குமிடம் எஸ். கே. மெடிக்கல்ஸ், 480, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (கி- 466)

### வெளிவந்துவிட்டது

மாற்றம் மக்கள் சஞ்சிகையின் ஆடி—புரட்டாதி இதழ் சிறுகதை, கவிதை, கட்டுரைகளுடன் வெளிவந்துவிட்டது. ரூபா 10/-. (கி-484)

### நீமோல் கிருமி நாசினி

மலசல கூடங்கள், கழிவு நீரோடும் வாய்க்கால்களில் நீமோல் பாவித்து கொலரா, மலேரியா நோய்க்கிருமிகளிலிருந்து பாதுகாப்புத் தேடுங்கள்; போத்தல் விலை-ரூ. 70/- அண்ணா கோட்பிக்கடைகளிலும் விற்பனையாகிறது மிக்க கவற். ஏ-3452)

### வியாபாரிகளுக்கு

நூல், லேஸ், சில்லட், போக்கட் கவறிங் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் மொத்தமாகப் பெற்றுக்கொள்ளலாம். ஜெயா அழகு சாதன மாளிகை, 177A, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம். (எ-3400)

### பரபரப்பாகப் பேசப்பட்ட நாவல்

1991ம், 1992ம் ஆண்டுகளில் வெளிவந்த நாவல்களில் பரபரப்பாகப் பேசப்பட்டநாவல் "சுவடுகள்" விற்பனையாகின்றது. பூபாலசிங்கம், ஸ்ரீகாந்தமலர், புத்தகசாலைகள் யாழ்ப்பாணம். கி-480

### போத்தல்கள் தேவை

ஹொர்லிக்ஸ், விவா போத்தல்கள் மூடியுடனும், ஜாம் சோஸ்பிளி மற்றும் வேடியல் போத்தல்கள் எம்மால் கொள்வனவு செய்யப்படும். விற்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:- ரேஸ்ற் லேன் இன்டஸ்றீஸ், (தனி) லிமிட், 14, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (ஏ-3416)

### வைத்தியம்

செங்கண்மாரி, (Hepatitis) குடற்புண், தொய்வு, வாத ரோகங்கள், வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, தோல் காலவியல், சரும நோய்கள், மாதவிடாய்க்குத்து, இரத்தப் போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக் குறைவு, மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியகலாநிதி கி. இராசரத்தினம் 181, 2-ம் குறுக்குத் தெரு. யாழ்ப்பாணம். (கி-475)


## வாந்திபேதி கருத்தரங்கு

(கொக்குவில்)

வட்டுக்கோட்டைப் பகுதியில் உள்ள 6 கிராமங்களில் வாந்திபேதி நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

நோய் பரவாமல் தடுப்பது பற்றிய கருத்தரங்கும், 1வயது முதல் 5 வயது வரையிலுமுள்ள சிறுவர்களுக்கு இன்று திங்கட்கிழமை காலை 8-30 மணி முதல் பேசியோ மருந்து கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## பொது அறிவுப் போட்டி

(உடுவில்)

மாணவர்களிடையே பொது அறிவை வளர்க்கும் நோக்குடன் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தினர் பாடசாலை மாணவர்களிடையே பொதுஅறிவுப் போட்டியொன்றை நடாத்த உள்ளனர். -109

## வெளிச்சம் வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் மாதாந்த வெளியீடான 'வெளிச்சம்' கலை, இலக்கிய சமூக இதழ், இரண்டாம் ஆண்டு நிறைவுச் சிறப்பிதழாக வெளிவந்துள்ளது. தமிழீழத் தேசியத் தலைவர் திரு வே. பிரபாகரன் நீதியாளர்கள் சத்தியப்பிரமாணத்தின்போது வழங்கிய செய்தியுடன் மாவீரரின் முன்பக்கக் கவிதையும் பிரம்ம ஞானி எழுதிய "கருத்துலகமும் வாழ்வியக்கமும்" என்ற கட்டுரையும் உள்ளன.

மற்றும் சிறுகதைகள், நாடகம், போர் உலா மதிப்புரையும் வேறுசில ஆக்கங்களும் இடம்பெற்றுள்ளது.

## அருள் மாதா திருநாள்

(அரியாலை)

யாழ். இராசாவின் தோட்டம் அருள் மாதாவின் 7ம் ஆண்டு திருவிழா கடந்த சனிக்கிழமை மாலை 5 மணிக்கு புனித அடைக்கல அன்னை ஆலய பங்குத்தந்தை அருட் திரு. ஜே. நிக்கிலஸ் அடிகள் தலைமையில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி மாலை ஆராதனைகள் நடைபெற்று வருகின்றன. எதிர்வரும் 3ந் திகதி ஞாயிற்றுக்கிழமைமாலை ஆராதனையும் அதனைத் தொடர்ந்து அருள்மாதா சொரூப ஆசீர்வாதத்துடனும் திருவிழா நிறைவுபெறுகிறது. (59)

## விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறை அண்ணா சனசமூக நிலையத்தின் ஆதரவுடன் நடாத்தப்படுவரும் தியாகி திலீபன் பாலர்பாடசாலை வருடாந்த விளையாட்டுப்போட்டி இன்று 27ம் திகதி திங்கட்கிழமை பி. ப. 1 மணிக்கு பாலர் பாடசாலை முன் மைதானத்தில் நடைபெறும்.

வலி-கிழக்கு நாவாந்துறை கடற்புலிகள் பொறுப்பாளர் திரு. நா. மதிவண்ணன் தமிழீழ தேசியக் கொடியை ஏற்றி வைப்பார். பாடசாலைக் கொடியை மெதடிஸ்த திருச்சபை போதகர் அருட்திரு ரெறன்ஸ் ஏற்றி வைப்பார்.

பிரதம விருந்தினராக திரு. சிவா கதிரமலை கலந்துகொள்வார். (162)

## அருளுரை

(யாழ்ப்பாணம்)

வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள்தேவஸ்தான வருடாந்த மஹோற்சவத்தில் ஆரம்பத்திலிருந்து தினமும் நடைபெற்று வந்த அருளுரைகள் அக்டோபர் முதலாம் திகதி வரை நடைபெறும்.

அருளுரை வழங்கிய பெரியோர்கள் அனைவரும் தேவஸ்தான ஆதீன மகாசபையினரால் பொன்னுடை போர்த்தி கௌரவிக்கப்படுவார்கள். -162

## மக்கள் வங்கி நவீன சந்தைகிளை

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கி நவீன சந்தை கிளை இம்மாதம் 20 திகதி தொடக்கம் முழுமையாக யாழ் பல்கலைக்கழக வளாகத்தின் வட பகுதியில் தபால் பெட்டி ஒழுங்கையில் இயங்கி வருகின்றது. வாடிக்கையாளர்கள் பலாலி வீதியிலிருந்து தபால்பெட்டி ஒழுங்கை மூலமாக வங்கியை வந்தடையலாம் இக்கிளையில் சகல வங்கி அலுவல்களும் நடைபெறுகின்றன என்று மக்கள் வங்கி பிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார். (162)

## பருத்தித்துறையில் வீதிகள் அபிவிருத்தி திணைக்கள அலுவலகம்

(பருத்தித்துறை)

யாழ்ப்பாணம் வீதிகள் அபிவிருத்தி திணைக்களத்துடன் இணைந்து இயங்கிவரும் பருத்தித்துறை வீதிகள் அபிவிருத்தித் திணைக்கள அலுவலகத்தை உடனடியாகப் பருத்தித்துறையில் திறந்து பருத்தித்துறை வீதிகள் அபிவிருத்தித் திணைக்கள செயற்பாடுகளை அங்கு நடைமுறைப் படுத்துமாறு வடக்கு கிழக்கு மாகாண பிரதம செயலாளர் திரு. கே. கணேசநாதன் வீதிகள் அபிவிருத்தி திணைக்கள யாழ் பிரதம பொறியியலாளருக்கு உத்தரவிட்டுள்ளார்.

யாழ். பிரதேசத்தில் யாழ்ப்பாணம், பருத்தித்துறை, கிளிநொச்சி பிரிவுகளில் வீதிகள் அபிவிருத்தித் திணைக்கள அலுவலகங்கள் இயங்கும் என வடக்கு கிழக்கு மாகாணசபை ஏற்கனவே அறிவித்திருந்தது.

ஆனால் பருத்தித்துறை அலுவலகம் பருத்தித்துறையில் இயங்கவில்லை. இதனால் ஏற்பட்ட பாதிப்புகள்பற்றி வராத்துப்பளை சனசமூக நிலையம் வடக்கு கிழக்கு மாகாணசபை பிரதம செயலாளருக்கு தெரிவித்திருந்தது. (52)


# நினைவில் நிறைந்த 3 ஆண்டுகள்.....

## தேவசகாயம் மிக்கேல் ராசா

அன்னையின் மடியில்: 1940 - 12 - 4

கிறிஸ்துவின் அடியில்: 1990 - 9 - 27

"அப்பா நீங்கள் எம்மை விட்டு எங்கு சென்றீர்கள்

உங்களைக் காணாது நாமிங்கு வாடுகின்றோம்.
வருமளவும் காத்திருப்போம்.

"எழுந்து வா மீண்டும் எழுந்து வா"

உம் ஆத்ம சாந்திக்காக யேசுவிடம் மன்றாடும்:

மனைவி: இரத்தினம்மா,
பிள்ளைகள்; தேவராணி, தேவராசா, சைந்தன், ஜெயராணி.

நெல்லியடி, கரவெட்டி. (கி-485)


## எதிரி எம்மைத்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கவேண்டும்."

இவ்வாறு யாழ். மாவட்ட விடுதலைப் புலிகள் அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி, நேற்று நல்லூரில் நடைபெற்ற லெப். கேணல் திலீபனின் ஆறாவது ஆண்டு நினைவு நாள் இறுதிக் கூட்டத்தில் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்: எமது மக்கள் விழிப்பாக, நிதானமாக இருப்பதை எதிரியானவன் விரும்பவில்லை. எமது மக்களை வீழ்ச்சி அடையச் செய்ய, மயக்கம் அடையச் செய்யப் பல திட்டங்களை எதிரி செயற்படுத்துகின்றான். நாம் மயக்கமடையக்கூடாது. எமது வாழ்வுக்காக, போராட்டத்துக்காகத் திலீபன் பல அடித்தளங்களை இட்டுள்ளார்.

மக்கள் புரட்சிக்குத் தயாராகவேண்டும் அதேவேளை விழிப்பாகவும் இருக்கவேண்டும் எமது மக்கள் புரட்சி செய்து கொண்டிருக்கிறார்கள். அதனை அறியாமலே அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள் கிளாலிப் பயணங்கூட ஒரு பெரிய புரட்சியைச் செய்கின்றார்கள் ஸ்ரீலங்கா அரசின் அடக்குமுறையை மீறி ஒவ்வொருவரும் கிளர்ந்து எழவேண்டும். இதனையே திலீபனும் விரும்பினார் நடைபெறுவதும் இதுதான்.

யாழ்ப்பாணம், மன்னார், திருமலைப் பகுதிகளில் மீனவர்கள் கடலில் மீன் பிடிக்க முடியாது அரசு கடல் தடைச் சட்டத்தை போட்டாலும், எமது மக்கள் அதனை மீறிப் பயணம் செய்கின்றார்கள். தொழில் செய்கின்றார்கள் மக்கள் முழுமையான புரட்சியில் இறங்கும்போது, மக்கள் புரட்சி வெடிக்கும் சுதந்திரத் தமிழீழம் மலரும்

ஸ்ரீலங்காவில் 30 மக்களுக்கு ஓர் இராணுவ வீரனும், இந்தியாவில் 120 மக்களுக்கு ஓர் இராணுவ வீரனும் இருக்கின்றனர். அந்த வகையில் இந்தியப் படையைவிட, இலங்கைப் படை பலமானது. இருந்தும் முன்னேற பெருமளவு படைக்கலம் தேவை. ஆனாலும் முன்னேற முடிகிறதா? முடியவில்லையே? எமது தேசத்தில் எத்தனை மக்களுக்கு ஒரு போராளி இருக்கிறார். ஊருக்கு ஒன்று இரண்டாக எடுத்துத்தான் எமது இனத்தைச் சிறப்பிக்கின்றோம். சிறந்த உறுதிப்பாட்டினாலும் தலைமையின் வழிகாட்டலினாலும்தான நிமிர்ந்து நிற்கின்றோம் ஊரே புலியானால் எதிரியால் முன்னேறமுடியுமா? திலீபனுடைய தியாகம் எந்தவொரு ஆதிக்கத்தினாலும் எமது போராட்டத்தை வெல்ல முடியாது என்பதனைத் தெளிவாகக் காட்டி நிற்கிறது.

எமது வளர்ச்சி எமது மக்களின் முன்னால் தான் நிகழ்கிறது ஸ்ரீ லங்கா அரசின் நிலை கேள்விக்குறியாகவே இருக்கிறது படைப்பல நிலைப்பாட்டை நம்பித்தான் இருக்கின்றது சிங்களமக்கள் குழப்பத்துடனும் நம்பிக்கையின்மையுடனேயே இருக்கின்றனர். ஆனால் எமது மக்கள் வெற்றியை சந்திக்கப்போகிறார்கள் என்பது தெளிவாகின்றது. தொடரும் அழிவையும் துன்பத்தினையும் எமது மண்ணும்மக்களும்தொடர்ந்து சந்திக்கமுடியாது.

மண்கிண்டிமலை ராணுவ முகாமை படையினரால் காப்பாற்றமுடியவில்லை. எப்படி எங்களை காப்பாற்றுவார்கள் என்று சிங்கள மக்கள் கேட்கின்றனர். இந்நிலையில் எமது நிலைப்பாடு என்ன என்பதை நாம் நன்கு உணர்ந்து கொள்வோம். நாம் உறுதியாகவும் நிதானமாகவும் நிற்கின்றோம். விடுதலைப் புலிகள் மட்டும் தனித்து நின்றால் மட்டும் போதுமா? எம்முடன் மக்கள் உரமாக நிற்கிறார்கள். மக்கள் பலமாக இருக்கவேண்டும். எமது மக்களின் நிறைந்த அழிவுகள் துன்பங்கள் மத்தியிலும் எதிரி இனி முன்னேறுவதை அனுமதிக்க முடியாது. நாம் போராடியே ஆக வேண்டும். இழப்பைத் தொடர்ந்து தாங்கமுடியாது. இதுவரை கால போராட்டத்தில் 5500க்கு மேற்பட்டமாவீரர்களை மட்டுமல்ல 40,000வரையான மக்களும் கொல்லப்பட்டுள்ளனர். எமது மக்களின் நிம்மதி, சந்தோசத்திற்காக போராளிகள் எல்லைகளில் நிற்கிறார்கள். எமது வீரர்கள் எதிரியை முகாமிற்குள் முடக்கி வைத்து போராடுகிறார்கள்

திலீபன் தனது வாழ்வினூடாக போராட்டத்திற்கான பல அடித்தளங்களை இட்டுள்ளான் அதனுள் குறிப்பிட்டத்தக்கது கிராம நீதி மன்றங்கள் அவை புதிய வடிவம் பெற்று இன்று சுதந்திரமான நாட்டின் சுதந்திரமான நீதி நிர்வாகமாக உருப்பெற்றுள்ளது

எமது தாயகத்தை நோக்கிய பயணத்தில் விரைவாக செல்வோம். விழிப்பாக நிதானமாக செயற்படுவோம் என்றார். (158 - 157-162 - கி

## பாதுகாப்பு வலய

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பல வைத்தியர் ஈ. எஸ் பேரம்பலத்தின் வீட்டில் தென்னை மரம் ஒன்றின் வட்டினுள் வீழ்ந்து வெடித்துச் சிதறியது.

இதனால் ஷெல் வீழ்ந்த வீட்டின் அருகில் வசித்து வரும் காரைநகர் களபூமியை சேர்ந்த கே. சுப்பிரமணியம் (63 வயது). பி தர்சினாதேவி (26 வயது) ஆகியோர் படுகாயமடைந்து யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி ஷெல் சிதறல்கள் பாதுகாப்பு வலயத்தினுள் வீழ்ந்ததுடன் வலயத்தின் எல்லையில் எரிந்துகொண்டிருந்த தீயூட்டு லைற்றுகள் முற்றாக நொருங்கின. இதையடுத்து நகர்ப்பகுதி சில மணி நேரம் பெரும் பதற்றத்திற்குள்ளானது

மேற்படி ஷெல் தென்னை மரத்துடன் மோதாமல் போயிருந்தால் பெரும் உயிர்ச் சேதம் ஏற்பட்டிருக்குமெனவும் தெரிவிக்கப்படுகிறது (கி-157க-)

## திலீபன் நினைவு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வடபகுதிக்கு வந்தது. மலர்தூவி ஈகைச் சுடரேற்றி வீர வணக்கம் செலுத்தப்பட்டது

இதனையொட்டி மக்களின் இயல்பு நிலை பாதிக்கப்பட்டது. மக்கள் ஒன்று பட்டு கோட்ட ரீதியாக பல இடங்களில் உண்ணா விரதங்கள் மேற்கொண்டனர் யாழ் மாவட்டம், வன்னி, முல்லை மாவட்டங்களிலும் அடையாள உண்ணாவிரதமும் நினைவுக் கூட்டங்களும் நடைபெற்றன.

யாழ் மாவட்டத்தில் கந்தசுவாமி கோவில் முன்றலில் தீவகம் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செம்மணன் தலைமையில் நேற்றுக் காலை 7-00 மணிக்கு அடையாள உண்ணாவிரதம் இடம் பெற்றது. இந்நிகழ்வில் தமிழீழ தேசியக்கொடியை யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி ஏற்றி வைத்தார் விடுதலைப்புலிகள் மூத்த தலைவர் தேவர். பரா. மற்றும் விடுதலைப்புலிகளின் முக்கிய பிரமுகர்களின் கருத்துரைகளோடு கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன

சாவகச்சேரி மணம் குளப் பிள்ளையார் கோவில் முன்றலில் தென்மராட்சி அரசியல் துறைப் பொறுப்பாளர் சுந்தண்ணா தலைமையிலும் அல்வாய் மாவிசந்தி பிள்ளையார் கோவிலில் வடமராட்சி மகளிர் படையணிப் பொறுப்பாளர் மல்லிகா தலைமையிலும், உண்ணாவிரதங்களும் பின் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன

யாழ் கோட்டை வீழ்ந்த 3-ம் ஆண்டு நினைவுநாளான இன்று யாழ். மாவட்ட தளபதி அன்பு தமிழீழ தேசியக் கொடியை கோட்டையில் ஏற்றிவைத்தார். (ம - கி)

மனிதர்க்கு இலட்சியங்கள் தாரகைகள் போன்றவை. அவற்றை கைக்குள் அடக்கிவிட முயன்றால் தோல்வி நிச்சயம். ஆனால் அவைகளை வழிகாட்டிகளாகக் கொண்டு பின்தொடர்ந்து சென்றால் போக வேண்டிய இடத்தை அடைவது உறுதி.

— கார்ல் சூருஸ்

# யாழ். குடாவில் தொடரும் கொலராவின் அச்சுறுத்தல்

(ஜீ. எச். தரன்)

யாழ் குடாநாட்டில் குறிப்பிட்ட சில பகுதிகளில் வாந்திபேதி நோய் (கொலரா) தீவிரமாகப் பரவிக் குடாநாட்டு மக்களுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது.

தற்போது பல உயிராபத்துக்கள் மற்றும் இராணுவ அச்சுறுத்தல்களின் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ் மக்கள் வாந்திபேதி நோயின் அச்சுறுத்தலையும் எதிர்கொள்ளவேண்டிய அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

கடந்த மூன்றாண்டுகளில் குடாநாட்டு மக்களின் துயர நிலை சொல்லுந்தரமன்று. மக்களின் நிரந்தர இருப்பிட வசதிகள் பாதிப்புற்றுத் தற்காலிக இருப்பிடங்களில் கூடங் கூட்டமாக அமைந்து நெருக்கடிமிக்கச் சூழல், சுற்றாடல் உருவாக்கம் ஆகியன சுற்றாடல் சுகாதாரத்தை வெகுவாகப் பாதித்துள்ளன.

அத்தோடு உணவில் தன்னிறைவின்றி வந்த வீத்தியாசமற்ற போஷாக்கின்மை, சூழல் சுகாதாரச் சீர்கேடு, இயற்கையின் தாக்கத்தால் நீர் நிலைகளின் அசுத்தம் போன்ற காரணங்களால் பல தொற்று நோய்களின் தாக்கத்திற்குள்ளாகியிருக்கும் இவ்வேளையில் கொலராவும் மக்களை அச்சுறுத்தி வருகிறது.

உணவை அடுத்து மருந்துத் தட்டுப்பாடும் இந்நிலைமைய நோய்களுக்குப் பிரதான காரணம் எனலாம்.

சாதாரண காலத்தில் பாவனைக்குத் தேவைப்பட்ட மருந்துவகைகளில் மூன்றில் ஒரு பங்குதானும் தற்போது யாழ். குடாவில் கிடைப்பதில்லை. மக்கள் முற்றிலும் நிரந்தர நோயாளிகளாக மாறிக்கொண்டிருக்கின்றனர்.

எமது பகுதிச் சுகாதார வைத்திய அதிகாரிகளின் அறிவுறுத்தல்களுக்கிணங்க நாம் நோயிலிருந்து மீள இயன்றவரை சுகாதாரத்தைப் பேண வேண்டும்.

எம்மாலானவரை சுத்தத்தைப் பேணி நோய்க்காளாகாமல் இருப்பதே இந்நெருக்கடிகளை வெல்ல மிகச் சிறந்த மாற்றுவழியாகும்.

குறிப்பிட்ட சில நாள்களுக்குள் மாத்திரம் 100 பேர் வரை இந்நோயினால் பீடிக்கப்பட்டுள்ளது வைத்தியசாலைகளின் பதிவேடுகளிலிருந்து அறியமுடிகிறது. இந்நோயினால் இதுவரை நான்கு பேர் மரணமடைந்துள்ளனர்.

இந்நிலையில் இதனைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர பிரதேச சுகாதார சேவைகள் பிரிவின் தீவிர ஏற்பாட்டில் குடாநாட்டிலுள்ள பல சுகாதார சேவை நிறுவனங்கள் சுற்றாடல் சுத்திகரிப்பு, அறிவுரை வழங்கல் போன்ற செயல்பாட்டில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

மக்களின் நலன் கருதித் தற்போது, இச்சுற்றாடல் சுகாதாரப் பாதுகாப்பில் இறங்கியிருக்கும் ஏனைய குழுக்களுடன் அவ்வப்பகுதிச் சனசமூக நிலையங்களும், பொதுசேவை நிறுவனங்களும் இச்சேவையில் பங்கெடுத்து [illegible] மக்கள் நலன் காக்க ஆவன செய்ய முயற்சித்து நடவடிக்கையில் உடன் இறங்குவதும் இவ்வாபத்து விரைவில் நீங்க வழி சமைக்கும். (ரி)

## கொலராவை பரவவிடாது தடுக்க தீவிர நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் தற்போது தீவிரமாகப் பரவி வருகின்ற கொலரா நோயை அது மேலும் பரவவிடாது தடுப்பதற்கான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்நோயைக் கட்டுப்பாட்டில் கொண்டுவருவதற்காக பிராந்திய சுகாதார சேவைகள் தொற்று நோயியல் பிரிவு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளுக்கு உதவியாக சுகாதாரப் பணியில் தொடர்புள்ள வேறு பல பொதுநல அமைப்புக்களும் இச்சேவையில் ஈடுபட்டுள்ளன என்றும் வெகுவிரைவில் இதனை முற்றாகக் கட்டுப்படுத்தலாம் எனவும் பிராந்திய சுகாதார தொற்று நோயியல் நிபுணரும், பதில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருமான கே. சி. [illegible] தம்பிப்பிள்ளை தெரிவித்துள்ளார். (சி)

## மாணவர் மத்தியில் சுகாதாரக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் பரவி வரும் கொலரா போன்ற தொற்று நோய்களிலிருந்து மக்களைப் பாதுகாத்துக் கொள்ளவும், இதுபோன்ற தொற்றுநோய்கள் பரவாமல் இருப்பதற்கும் பாடசாலை மாணவர்களுக்கான சுகாதாரக் கருத்தரங்குகளை யாழ். மாநகரசபையின் சுகாதாரப் பகுதியினர் மேற்கொண்டு வருகின்றனர்.

இத்திட்டத்தின் கீழ் தொற்று நோய்கள் பரவுவதற்குரிய காரணிகள், அவற்றைத் தடுப்பதற்குரிய வழிமுறைகள் என்பனவும் குடிநீரை கொதிக்க வைத்துப் பாவிப்பது, தொற்றுநோய்கள் ஏற்படுவதை பெருமளவு தடுத்துக்கொள்ளும் என்பது போன்றதான கருத்துக்கள் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

—158

## யாழ். மாவட்ட கல்விக்கோட்ட உதைபந்தாட்ட போட்டி இன்று ஆரம்பமாகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டக் கல்விக் கோட்ட மட்டத்திலான உதைபந்தாட்டப் போட்டிகள் இன்று திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகவுள்ளது.

இன்று 15 வயதுக்குட்பட்டவர்களுக்கான போட்டிகள் யாழ்ப்பாணம், மருதனாமடம் கோட்டக் கல்வி அலுவலகங்களினால் ஆரம்பிக்கப்படுகின்றன. மருதனாமடம் கல்விக் கோட்டத்தினால் நடாத்தப்படும் போட்டிகள் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, உடுப்பிராய் இந்துக் கல்லூரி மைதானங்களில் நடைபெறவுள்ளன.

யாழ்ப்பாணக் கல்விக்கோட்டத்தினால் நடாத்தப்படும் போட்டிகள் இன்று கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இப்போட்டிகளைத் தொடர்ந்து 17 வயது, 19 வயதுக்குட்பட்டவர்களின் போட்டிகளும் நடைபெறவுள்ளன.

—வி-சி

நீரிருந்தால் ஏர்பிடிப்பார்
ஏர் பிடித்தால் நெல் கிடைக்கும்

## நமது நோக்கு

### இங்கு வருமா அந்த நிலை?

ரஷ்யாவில் ஜனாதிபதி தேர்தல் அடுத்த வருடம் ஜூன் மாதம் நடைபெறும் என அதிபர் பொறிஸ் யெல்ஸின் அறிவித்துள்ளார்.

சில நாட்களுக்கு முன் நாடாளுமன்றத்தைக் கலைத்தார். ஆனால் நாடாளுமன்றமோ கூட்டம் நடாத்தி அவரைப் பதவிநீக்கம் செய்தது; வேறொருவரை அதிபராகத் தெரிவு செய்தது!

ஆனால், தற்போதைய தகவல்களின்படி, நாடாளுமன்றம் வலுவிழந்துவிட்டது. இராணுவம், மத்திய வங்கி, உயர் நீதிமன்றம் போன்றவற்றின் ஆதரவு அதிபர் யெல்ஸினுக்கு உண்டு.

எனினும் அங்கு அரசியல் நெருக்கடி; குழப்ப நிலை!

சற்றுப் பின்னோக்கிப் பார்த்தால்! இரண்டாவது உலகப்போருக்குப் பின் இரண்டாவது பெரிய வல்லரசாக வளர்ந்துவிட்ட ரஷ்யா முதலாவது வல்லரசான அமெரிக்காவிற்குப் பெருந் தலையிடியாக இருந்து வந்தது.

ஆயுத உற்பத்திப் போட்டி; விண்வெளிப் பயணத்திற்போட்டி, நடுநிலை நாடுகளைக் கவர்ந்திழுத்து, சந்தையாக்கி, உற்பத்திப் பொருள்களை விற்றுவிடுவதிற் போட்டி!

மூன்றாவது உலக நாடுகளோ, பச்சோந்திகளாகி, கிடைக்கும் உதவிகளைப் பொறுத்து நிறம் மாறி இரு வல்லரசுகளிடமிருந்தும் கறந்துவிடும் கலை வளர்ச்சியில் ஈடுபட்டு வந்தன.

அந்தவேளையில், இலங்கை இனப்பிரச்சினை பற்றிப் பேச்சு எடுத்தாலே, "பிரிவினை என்ற பேச்சுக்கே இடமில்லை! ஒற்றையாட்சி அமைப்பின்கீழ் தீர்வுகாண்க!" என்று ரஷ்ய வல்லரசு மந்திர உபதேசம் செய்துவந்தது.

ஏனைய நாடுகளிலிருந்த கம்யூனிசக் கட்சியினர், குறிப்பாக இந்தியக் கம்யூனிஸ்டுகள் குருவின் உபதேசத்தை அடியொற்றி ஆலோசனைகள் வழங்கி வந்தன!

ஊருக்கு உபதேசித்த மந்திரம் உள்ளுக்கு எடுபடவில்லை. ரஷ்யாவில் வறுமை வளர்ந்து குழப்ப நிலை தோன்றியதும் வல்லரசு வட்டத்திலிருந்த கம்யூனிச நாடுகள் விலகிவிட்டன.

வல்லாதிக்கத்தால் அடங்கியிருந்த பல இன மக்கள் ரஷ்யப் பேரரசிலிருந்து பிரிந்து தனிநாடுகளாகிவிட்டன.

இரண்டாவது பெரிய வல்லரசுக்கே இந்தக் கதி! விரைவில் வல்லரசாகிவிட வேண்டுமென்று எண்ணிக் கொண்டிருக்கும் சிறிலங்காப் பேரரசிற்கு இந்நிலை வராது என்பது என்ன நிச்சயம்?

## சம்பள அதிகரிப்பு

(திருநெல்வேலி)

ஆசிரியர்களுக்கான அதிகரித்த சம்பளம் இம்மாதம் முதல் வழங்கப்பட்டுள்ளது. ஆகஸ்ட் மாதம் வழங்க இருந்த இச்சம்பள உயர்வு பின் இடைநிறுத்தப்பட்டிருந்தது தெரிந்ததே.

கடந்த மாதங்களின் நிலுவைப் பணமும் சேர்ந்து இச்சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டுள்ளது. (157)

## ஐஸ் கட்டி உற்பத்தி

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரில் மூன்று வருட கால இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் ஐஸ் கட்டியினை உற்பத்திசெய்து சந்தைப்படுத்தும் முயற்சியில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன கைத்தொழில் பகுதியினர் ஈடுபட்டுள்ளனர்.

நவீன தொழில்நுட்பம் ஒன்றின் அடிப்படையில் ஆரியகுளம் சந்தியிலே அமைந்திருக்கும் உதயம் பல்பொருள் அங்காடிக் கட்டிடத் தொகுதியிலே இந்த உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## இன்று

(திருநெல்வேலி)

யாழ்ப்பாணக் கல்லூரியின் முன்னாள் அதிபர் கலாநிதி எஸ். ஜெபநேசனுக்கு பிரிவுபசார வைபவம் யாழ்ப்பாணக் கல்லூரியில் இன்று 27ம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு ஒட்லிமண்டபத்தில் நடைபெற உள்ளது. —157

**

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஸ்ரீராகவேந்திரர் மிருத்திகாவில் இன்று நடைபெறும் மாதாந்த இசையாராதனையில் சங்கீதவித்துவான் செல்வி கனகாம்பா பத்மநாதனின் இன்னிசைக் கச்சேரி நடைபெறும். —162

**

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ வல்லிபுரநாதர் தேவஸ்தான வருடாந்த பூங்காவன உற்சவம் இன்று திங்கட்கிழமை நடைபெறும். —சு-ரி

**

(யாழ்ப்பாணம்)

யாழ். தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா வைபவம் இன்று திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு கல்லூரி வெளி அரங்கில் வித்தியாலய அதிபர் திரு. செ. யோகச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது —சு-சி

## இராசி பலன்

27-09-1993

திங்கட்கிழமை

(தமிழுக்கு புரட்டாதி 11)

துவாதசி மு. இ 7-32வரை, அவிட்டம் ந.இ 12-07வரை, சித்தயோகம். இராகு காலம் காலை 7-32 முதல் 9-02 வரை, சுபநேரம் ந. ப. 12-02 முதல் 1-32 வரை.

மேடம்: முயற்சிபலிதம், நன்மதிப்பு, பயணச் செலவு.

இடபம்: கௌரவப் பதவி, மனமகிழ்ச்சி, குடும்ப சுகம்.

மிதுனம்: சிறு எதிர்ப்பு, கடன் குரோதம் அலைச்சல்.

கடகம்: நம்பிக்கை கெடுதல், மனமுறிவு, சினம்கொள்ளுதல்.

சிங்கம்: தொழில் முன்னேற்றம், நண்பர் உதவி, வாக்கு வன்மை

கன்னி: கூடிக் குலாவுதல், மறுமுயற்சி, பணவரவு.

துலாம்: வேண்டாத பகை, அதிக யோசனை, வெறுப்பு.

விருச்சிகம்: தொழில் நஷ்டம், தகாதசெயல், பணமுடை.

தனுசு: பணியால் தொல்லை, வேலைப்பளு, தெய்வதரிசனம்.

மகரம்: சங்கடமான நிலை, உறவில் விரிசல், காரியதடை.

கும்பம்: நல்ல முடிவு, சகோதர பாசம், பாராட்டு.

மீனம்: கஷ்ட ஜீவனம், வைத்திய செலவு, மனக்குறை.

— ஜோஸ்யர்.

## இந்திய கடல் எல்லையில் 3 கலங்கரை விளக்கங்கள்

(சென்னை)

இந்திய மீனவர்கள் இலங்கை கடல் எல்லைக்குள் சென்றுவிடாமல் இருப்பதற்காக கடலோரப் பகுதியில் மேலும் மூன்று கலங்கரை விளக்கங்கள் அமைக்கப்பட வேண்டும் என்று கடலோர காவல்படை தெரிவித்துள்ள யோசனையை தமிழக முதலமைச்சர் ஏற்றுக்கொண்டுள்ளதாக கடலோரக் காவல் படையின் கிழக்குப் பிராந்தியத் தலைவர் கொமடோர் காசிமிரோ கூறியுள்ளார்.

இராமேஸ்வரம், மண்டபம் மற்றும் கோடிக்கரை ஆகிய இடங்களிலுள்ள கலங்கரை விளக்கங்களின் ஒளித்திறன் அதிகரிக்கப்படும் என்றும் அவர் கூறினார். —சி

## ஐ. நா. படையின் ஹெலி சுட்டு வீழ்த்தப்பட்டது

(மொகடிசு)

சோமாலியாவில் நிவாரண பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த ஐ. நா. சபைப் படையினரின் ஹெலிகொப்டர் ஒன்றை சோமாலியாப்போராளிகள் சுட்டு வீழ்த்தியுள்ளார்கள்.

இந்த ஹெலிகொப்டரில் இருந்த மூன்று அமெரிக்கப் படையினர் கொல்லப்பட்டனர், இருவர் படுகாயமடைந்தனர்.

சோமாலியாவில் ஐ. நா. படைக்கும், மொகமட் ஹைதீதின் படைக்குமிடையில் இடம்பெற்றுவரும் சண்டையில் இதுவரை 56 ஐ. நா. படையினர் கொல்லப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

(ம-சி)

# சோவியத் யூனியனை மீண்டும் கட்டி எழுப்பக் கோரிக்கை

## புதிய ரஷ்ய அதிபர் அழைப்பு

(மாஸ்கோ)

சோவியத் யூனியன் மீண்டும் ஸ்தாபிக்கப்பட வேண்டுமென ரஷ்ய நாடாளுமன்றத்தால் புதிய ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டுள்ள திரு. அலெக்ஸாண்டர் ருஸ்கோவ் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத்தால் பதவி நீக்கம் செய்யப்பட்டிருக்கும் திரு. பொறிஸ் ஜெல்சினை ஒதுக்கிவிடுமாறும் அவர் ரஷ்ய ஆயுதப்படையினரை வேட்டுள்ளார்.

அரசியல் யாப்பை, சட்டத்தை பேணிப்பாதுகாத்து சோவியத் யூனியன் மீண்டும் உதயமாவதை உறுதிப்படுத்துவது அவசியமாய் உள்ளது எனவும், இன்று முதல் நாடுமுழுவதிலும் அரசியல் ரீதியான வேலை நிறுத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் திரு. ருஷ்கோவ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

திரு. பொறிஸ் ஜெல்சின் ஜனாதிபதியாக இருந்தபோது திரு. ருஷ்கோவ் உபஜனாதிபதியாக இருந்தவர். திரு. ருஷ்கோவ் மிகத் தீவிர கம்யூனிஸவாதி என வர்ணிக்கப்படுபவர். இவரை ஜனாதிபதியாக்கியதன் மூலம் மீண்டும் சோவியத் யூனியன் உதயமாகும் என்ற அச்சம் அமெரிக்காவிற்கும் அதன் தோழமை நாடுகளுக்கும் இருந்து வந்தது. தற்போது திரு. ருஷ்கோவின் அறிவிப்பு அவற்றின் அச்சத்தை உறுதிப்படுத்தியிருப்பதாகவும் கூறப்படுகிறது. (சி)

# எழுதுவினைஞர் பதவிக்கு வெட்டுப்புள்ளி-135

(யாழ்ப்பாணம்)

இறிலங்கா மத்திய அரச சேவைக்கு 1992ம் ஆண்டு நடாத்தப்பட்ட எழுதுவினைஞர் பரீட்சையில் வெட்டுப்புள்ளியான 135ம் அதற்கு மேல் எடுத்தவர்களும் இதற்கு தெரிவு செய்யப்படுவார்கள் எனத் தெரியவருகிறது.

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடாத்தப்பட வேண்டுமென யாழ். அரசாங்க அதிபர் திரு. கே. மாணிக்கவாசகர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்புகொண்டுள்ளார் என்றும் இதன் விபரம் பின்னர் அறிவிக்கப்படுமென்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை 1992ம் ஆண்டு யாழ் மாவட்டத்தில் நடத்தப்பட்ட தமிழ்தட்டெழுத்தாளர் பரீட்சையில் வெட்டுப்புள்ளி 90 எனவும் யாழ். அரச அதிபர் தெரிவித்தார். (162-இ)

### மரம் நாட்டும் திட்டம்

(பருத்தித்துறை)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அம்பன் ராஜன் கிராமத்தில் மரம் நாட்டும் திட்டத்தின் கீழ் சவுக்கு மரங்களை நாட்டுவதற்கென ''சவுக்கம் நாற்று மேடைகள்'' அமைக்கப்பட்டுள்ளன. (52)

# கொலரா பரவும் வேகம் அதிகரிப்பு

(நாவலடி)

யாழ். குடாநாட்டில் வாந்திபேதி நோய் நாளுக்கு நாள் அதிகரித்துவருகிறது. கைதடி நயந்த் தொழிற்சாலை இடம் பெயர்ந்தோர் முகாமில் ஐந்து பேருக்கு வயிற்றோட்ட நோய் காணப்பட்டு நேற்று சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். மேற்படி முகாமில் வயிற்றோட்ட நோய் காரணமாக சிகிச்சை பெறுவதற்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த முப்பத்தியொரு பேரில் ஏழு பேர் சுகமடைந்து முகாம் திரும்பியுள்ளனர்.

கெரியவி பண்டாரி குடியிருப்பு இடம் பெயர்ந்தோர் முகாமிலுள்ள மூவர் வாந்திபேதியால் நேற்று சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு பின் யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

வாந்திபேதிக்கு சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று சுகமடைந்து வீடு சென்ற மீசாலையைச் சேர்ந்த குடும்பப் பெண் ஒருவர் ஒன்பது நாட்களின் பின் வயிற்றோட்ட நோயினால் மீண்டும் பீடிக்கப்பட்டு நேற்று சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (163-157-க-இ)

# காலத்தின் கட்டளைக்கேற்ப எமது போராட்டம் நடக்கிறது

## திலீபன் நினைவு தினக் கூட்டத்தில் உரை

(திருநெல்வேலி)

நாம் போராட்டத்தை வேண்டாம் என்று கூறுது விட்டாலும் போராட்டம் நடத்த காலம் கட்டளையிட்டுள்ளது. காலத்தின் கட்டளைக்கேற்பவே போராட்டம் நடக்கின்றது மக்கள் புரட்சிவெடித்துள்ளது எனவே சுதந்திர தமிழ் ஈழம் மலரும்.

தியாகி திலீபனின் 6ம் ஆண்டு நினைவு தின இறுதி நிகழ்வுகள் நேற்றுமாலை நல்லூர் வடக்கு வீதியில் நல்லூர் வட்டவைப் பொறுப்பாளர் திரு. எழிலன் தலைமையில் இடம் பெற்றபோது அவர் இவ்வாறு கூறினார்.

பேராசிரியர் சண்முகதாஸ் உரையாற்றுகையில்; திலீபனின் இயக்கமானது அவனை மகாத்மா, ஆத்மா, பரமாத்மா என்ற நிலைகளுக்கு மேலாக உயர்த்திவிட்டுள்ளது. அவன் தெய்வத்துள் தெய்வமாகிவிட்டான் என்றார்.

கடற் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஆதவன் உரையாற்றுகையில், திலீபன் மேற்கொண்ட அகிம்சை போராட்டம் அக்காலத்திற்கே உரியது. அவனது அகிம்சை மதிக்கப்படாததால் இனி ஆயுதப் போராட்டமே இலக்கை அடைய வழியென கூறிவிட்டான். இன்று கரும்புலிகள் விசுவத் தக்கதாகிவிட்டனர். மண்கிண்டிமலையின அவர் மணி நேரத்தில் அழித்த நாம் ஏன் நாளை பலாலியை அழிக்கமுடியாது என கூறினார்.

தமிழீழ மகளிர் அமைப்பு பொறுப்பாளர் ரதி பேசுகையில் திலீபனின் முதலாவது கோரிக்கையை மக்களுக்காகவே முன்வைத்தான்; அவன் மரணத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டவன். பெண்கள் அணியை அன்று உருவாக்கிய பெருமை திலீபனையே சாரும் என்றார். (157 - சி)

**இரு ஊர்காவல்**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

7-30 மணியளவில் இரு தரப்பினருக்கும் இடையில் கடும் மோதல் ஏற்பட்டதாகவும் ஊர்காவற் படையினருக்கு மேலும் பலத்த இழப்புகள் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க-சி)

**பருத்தித்துறையில்**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இச்சம்பவம் நேற்று அதிகாலை 5-30 மணிக்கு இடம் பெற்றது.

இச்சம்பவத்தில் பீரங்கிக் குண்டுகள் கடலில் விழுந்து வெடித்ததால் 'யாஜ்' சேதமடையவில்லையெனத் தெரிவிக்கப்பட்டது. (சு-இ)

**திருமலை**

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்படுகிறது.

நேற்று விமானப் படையினர் ரோந்து சென்றபோதே புலிகள் தாக்கியதாக இலங்கை வானொலி கூறியது. நேற்று முன்தினம் வெலிகந்தை பகுதியில் புலிகளின் தாக்குதலில் 7 படையினர் உயிரிழந்ததும் தெரிந்ததே. (சி)

**யாழ்ப்பாணம் வந்த**

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஒழித்து வைக்கப்பட்டிருந்தமை கடந்த வாரம் கண்டு பிடிக்கப்பட்டதை அடுத்தே பல வருடகாலமாக இடம் பெற்று வந்த இம்மோசடி அம்பலமாகியதாம்.

மேற்படி பத்து லொறிகளும் வவுனியா தாண்டிக்குளம் சோதனை முகாமிற்கு 2 கி.மீ. தூரத்திற்குமுன் பிடிபட்டனவாம். (சி)

**வடக்கே**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தீவுப்பகுதி படைமுகாம்கள் உட்பட பல முகாம்களில் தற்போது பலவித பயிற்சிகளும் புதிய படையினருக்கு வழங்கப்பட்டுவருகிறது.

அடுத்த இரு மாதங்களிலும் புதியவர்களுக்கான பயிற்சிகள் முடிவுற்றதும் இவர்களும் உடனடியாக வடக்கு-கிழக்கில் புலிகளுக்கு எதிரான போரில் ஈடுபடுத்தப்படுவர் எனவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. (இ)

# நோயாளர்களுடன் 'ருகுணு' புறப்பட்டது

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் இருந்து சிகிச்சை பெற்று திரும்பிய நோயாளர், உதவியாளர் 90 பேருடன் திருகோணமலையில் இருந்து திரும்பிய ருகுணு கப்பல் கொழும்பில் சிகிச்சை பெறச் செல்லும் நோயாளர் உதவியாளர் உட்பட 105 பேருடன் நேற்று மீண்டும் திருகோணமலை நோக்கி புறப்பட்டது.

பருத்தித்துறையில் இருந்து நேற்று மாலை 5 மணிக்கு புறப்பட்ட இக்கப்பலில் யாழ். வைத்தியசாலைப் பணிப்பாளரும் கொழும்பு புறப்பட்டு சென்றார். வைத்தியசாலையின் அதிமுக்கிய விடயங்கள் பற்றி கொழும்பு தலைமை யலுவலகத்தில் பிரஸ்தாபிப்பதற்காகவே இவர் அவசரமாகப் புறப்பட்டுச் சென்றார் என ஆஸ்பத்திரி வட்டாரத்தில் இருந்து தெரிய வருகிறது. (சு)

# 'றுகுணு' கப்பல் வந்து சேர்ந்தது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்துக்கு வேண்டிய உரவகைகளை கொழும்புத் துறைமுகத்திலிருந்து ஏற்றிக்கொண்டு சில தினங்களுக்கு முன் பருத்தித்துறை நோக்கிப் புறப்பட்டு வந்த 'றுகுணு' கப்பல் கடந்த சில நாட்களாக திருகோணமலை துறைமுகத்தில் பலத்த சோதனைக்குட்படுத்தப்பட்டபின் நேற்று பருத்தித்துறை துறைமுகத்தை வந்து சேர்ந்தது.

இந்தக் கப்பலில் யாழ். மாவட்ட ஓய்வூதியர்களுக்கான செப்டெம்பர் மாத ஓய்வூதிய வவுச்சர்கள் எடுத்து வரப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. இந்தக் கப்பலிலிருந்து உரவகைகள் இறக்கும் வேலை இன்று ஆரம்பிக்கப்படுமென்றும் தெரிய வருகிறது. (162-இ)

**ஆங்கில**

1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாணத்தில் நடாத்துமாறு யாழ். அரச அதிபர் சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்புகொண்டு பலாலி ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையில் நடாத்த ஏற்பாடு செய்துள்ளார்,

தற்போது கொழும்பில் தங்கி நிற்கும் பலாலி ஆசிரியர் கல்லூரி விரிவுரையாளர் திரு. எஸ். தெய்வதவபாலன் இங்கு வந்ததும் இதற்கான ஒழுங்குகள் செய்யப்படவுள்ளதாகவும் அரச அதிபர் தெரிவித்தார். (162-இ)

# முல்லைத்தீவில் புக்காரா தாக்கு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மணலாறு கோட்டம் செம்மலை பகுதியில் புக்காரா விமானத்தாக்குதல் இடம் பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் முற்பகல் 10 மணியளவில் இரு புக்காரா விமானங்கள் இப் பகுதியில் குண்டுத்தாக்குதலை நடாத்தியுள்ளன. (க-இ)

# கர்ப்பிணிப் பெண் சடலமாக ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

5 மாதக் கர்ப்பிணிப் பெண் ஒருவர் கிருமிநாசினி அருந்தித் தற்கொலை செய்து கொண்டார். நேற்று முன்தினம் இரவு யாழ். ஆஸ்பத்திரியில் சடலமாக ஒப்படைக்கப்பட்டார்.

கொடிகாமம் பருத்தித்துறை வீதியைச் சேர்ந்த 23 வயதான இளம் குடும்பப் பெண்ணே மரணமானவராவார்.

சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் இருந்து யாழ். ஆஸ்பத்திரிக்கு கொண்டுவரும்போதே இவர் இறந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. திருமணமாகி 8 மாதங்களின் பின்னர் இவர் இந்தச் சோக முடிவை மேற்கொண்டதாகக் கூறப்படுகின்றது. விசாரணை முடிவில் தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டு, கணவரிடம் சடலம் ஒப்படைக்கப்பட்டது. சு-இ

# பழநி இடைத் தேர்தல்: அ.தி.மு.க. முன்னணியில்

(சென்னை)

பழநி மக்களவை இடைத் தேர்தலில், அ. தி. மு. க. வேட்பாளர் திரு. பி. குமாரசாமி தொடர்ந்தும் முன்னணியில் உள்ளார்.

இவர் தமக்கு அடுத்தபடியான தி. மு. க. வேட்பாளர் திருமதி சுப்புலக்ஷ்மி ஜெகதீசனை விட 43,000 வாக்குகள் கூடுதலாகப் பெற்றுள்ளார்.

மொத்த வாக்குகளான 6 லட்சத்து 69 ஆயிரத்து 948 வாக்குகளில், 5 லட்சத்து 80 ஆயிரம் வாக்குகள் எண்ணப்பட்ட நிலையில் கட்சிகள் பெற்ற வாக்குகள் விபரம்: அ. தி. மு. க. 2 லட்சத்து 41 ஆயிரம் வாக்குகள். தி. மு. க. 1 லட்சத்து 98 ஆயிரம் வாக்குகள். காங்கிரஸ் (ஐ) 1லட்சத்து 12ஆயிரம் வாக்குகள்.

இதற்கிடையில் தேர்தல் அதிகாரிகளுக்கு அ. தி. மு. க.வினர் இடையூறு விளைவித்த தன் காரணமாக வாக்குகள் திருப்பி எண்ணப்படவேண்டுமென தி. மு. க. வேட்பாளர் திருமதி சுப்புலக்ஷ்மி ஜெகதீசன் தெரிவித்துள்ளார்.

தேர்தல் ஆணையாளரின் அனுமதி பெற்ற பின்பே இத்தொகுதிக்கான தேர்தல் முடிவுகள் வெளிவரும் என்பதும் தெரிந்ததே. -க-இ

# அதிபர்கள் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

கல்வித் திணைக்களத்திற்கு வெண்கட்டிகளும் கரும்பலகை மைகளும் விண்ணப்பித்த சகல பாடசாலை அதிபர்களும் தமக்கென ஒதுக்கப்பட்டவற்றை இன்று திங்கட்கிழமை காலை 8-30 மணியிலிருந்து மாலை 4-30 மணி வரை யாழ். இந்துக் கல்லூரியில் ரொக்கத்தையோ அல்லது பாடசாலைக் காசோலையையோ செலுத்திப் பெற்றுக்கொள்ளவும். வெண்கட்டிப்பெட்டி ஒன்றின் விலை ரூபா 25/-ம் கரும்பலகை ½லீற்றர் ரின்னின் விலை ரூபா 120/-ம் ஆகும். (இ)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் விதரபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1993-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 27-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, Sri Lanka under Licenee Numbcr B/10 336/Bi